# ஆற்றுப்படை நூல்களில் சமுதாயம்

***முனைவர் ச.மாசிலாதேவி***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
ஜி.டி.என்.கலைக்கல்லூரி, திண்டுக்கல்

**மலர்: 10**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: ஜூலை**

**வருடம்: 2022**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v10iS1-Jul.5015

***ஆய்வுச் சுருக்கம்***

*சங்க இலக்கியங்களில் ஆற்றுப்படை நூல்கள் கூத்தர், பாணர், விறலி, பொருநர், குறவர், ஆயர், பரதவர் என மக்களின் வாழ்வியலை மையப்படுத்தி அமைந்துள்ளன. ஆற்றுப்படை நூல்களில் சங்க கால சமுதாய நிலை குறித்த பதிவுகள் அதிகளவில் உள்ளன. மனிதன் இயல்பாகவே கூடி வாழும் குணம் உடையவன். பொதுவாகத் தனித்து வாழ்வதை அவன் விரும்புவதில்லை. இதனால் அவன் சமூக உயிரி* (Social around) *என அழைக்கப்படுகிறான். மனிதனுடைய வாழ்க்கைத் தேவைகள் பிறரோடு கூடிவாழ வேண்டிய சூழ்நிலை ஏற்படுத்துகிறது. பல குடும்பங்கள் ஒன்று சேரும் போதுதான் சமூகம் உருவாகிறது. சமூகமாகப் பல கூடிவாழும் போது சிக்கல்கள் தோன்றுவதால், அதனை தீர்த்துக்கொள்வதற்கு சட்டதிட்டங்கள் தேவைப்படுகின்றன. இச்சட்டதிட்டங்களை செயல்படுத்த அரசு உருவாக்கப்பட்டது. சமூகம் என்பது பண்பாட்டை வளர்க்கும் களம் ஆகும். சிறந்த வாழ்க்கை நெறியையும் பண்பாட்டையும் வளர்க்கும் தனிமனிதர் பலரின் கூட்டமைப்பு சமூகமாகும். சங்ககாலச் சமூகம், தொழிலினை அடிப்படையாகக் கொண்டு செயல்பட்டது. சங்ககாலச் சமூகம், தொழில், திணை என இதன் அடிப்படையில் பிரிவுகள் காணப்படுகின்றன. பண்பாடு என்பது மனித சமுதாயத்தின் ஓர் உறுப்பு என்னும் நிலையில் அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்க நெறிகள், சட்டம் பழக்கவழக்கங்கள், ஆற்றல் முதலியவை அடங்கப்பெற்ற ஒரு வாழ்க்கை முறையின் முழுமைத் தொகுதியாகும். சங்க கால மக்களின் தொழில் முறைகளையும், கலைகளையும் இவ்வாய்வு எடுத்தியம்புகின்றது.*

## முன்னுரை

செந்தமிழின் வனப்பிற்கும், வளத்திற்கும் சிறப்புச் சேர்க்கும் ஆற்றுப்படை இலக்கியம் தொன்மையும், வளமையும் உடையது. அது சிற்றிலக்கியங்களின் முன்னோடி எனப் போற்றப்பெறும் அளவிற்குச் சிறப்பிற்குரியது. இதற்குச் சான்றாக சங்க இலக்கியத்தில் அமைந்துள்ள ஆற்றுப்படைப் பாடல்கள் அமைந்துள்ளன.

பரிசுபெற்ற புலவன் ஒருவன் பரிசு பெற விரும்பும் புலவனை ஆற்றுப்படுத்தி அதாவது நெறிப்படுத்தி அவன் செல்தவற்குரிய வழி, வழியில் ஏற்படும் தடைகள், செல்லும் வழியில் மக்கள் அளிக்கும் விருந்து பின்னர் அரசன் ஆதரிக்கும் முறை போன்றவற்றை விளக்கிக் கூறும் வகையில் பாடப்படுவது ஆற்றுப்படைப் பாடல்களாகும்.

பண்டைத் தமிழரின் வாழ்வையும், வரலாற்றையும், பண்பாட்டையும் பிற்காலத் தமிழர் அறிந்து கொள்ள மிகவும் துணையாய் நிற்பது பாட்டும், தொகையும் என்று உரையாசிரியர்களால் குறிக்கப்படும் சங்க இலக்கியங்களே ஆகும். அவை தமிழர் வாழ்வியல் நெறிகளை எடுத்தியம்பும் ஆற்றல் உடையதாக விளங்குகின்றன.

## தொழில்

சங்ககாலச் சமூக அமைப்பினை அக்கால இலக்கியம் கொண்டு உணர முடிகின்றது. தொழிலுக்குரிய இலக்கணமாக தொல்காப்பியம்

**“பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும்**
***கண்ணிய புறனே நானான் கென்ப.”***

***(தொல்.245)***

அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என்னும் நாற்பெரும் பிரிவினர் சமூகத்தின் மேல்தளத்தில் இருந்துள்ளனர். இவர்களைத் தவிரச் சமூகத்தின் நல்வாழ்வுக்கு உதவும் தொழில்களைச் செய்த பல்வேறு தொழில் பிரிவினர் இருந்துள்ளனர்.

## வேளாண்மை

மனித வாழ்விற்கு அடிப்படையானது உணவு. ஆதலால் உணவுப் பொருளின் இன்றியமையாமையை உணர்ந்து அவற்றை பெருக்கினர். உழவுத்தொழில் தலைமைத் தொழிலாக உயிர்த்தொழிலாகப் போற்றப்பட்டது. தமிழகத்தின் சிறப்பான தொழிலாக எப்போதும் போற்றப்படுவது உழவேயாகும்.

**சுழன்றும் ஏர்பின்னது உலகம் ஆதலால்**
**உழந்தும் உழவே தலை.**

***(குறள்.1031)***

## நாற்று நடுதல்

நன்றாக உழப்பட்டு களைநீக்கி, உரமிட்டு நீர் பாய்ச்சப்பட்ட வயல்களில் நாற்றுகளை நன்றாக அழுந்த நடுவர் என்பதை முடிநாறழுத்திய நெடுநீர்ச் செறுவல் என்று நெற்பயிர் நன்கு பருத்து முதிர்வதற்கு நல்ல காற்று இன்றியமையாத தாகலின் நான்கு திசைக் காற்றும் ஊடறுத்து வீசப்பெற்றமையால் நன்கு விளைந்தன என காற்றின் இயக்கத்தைக் காரணமாக்கி,

**பால்வார்பு கெழீஇப் பல்கவர் வளிபோகழ்வு**
**வாலிதின் விளைந்தன ஐவனம் வெண்ணெய்**

***(மலைபடு. 2-12)***

என்று நாற்று நடும்போதே நான்கு பக்கமும் ஊடறுத்து செல்லுமாறு இடைவெளி விட்டு நட்டனர். பயிர்கள் செழித்துப் பால்கட்டி,நெல்லின் அரிசி உருவானது.

## தச்சுத் தொழில்

தச்சர்கள் மக்களுக்கு வேண்டிய தட்டுமுட்டுச் சாமான்களையும், வண்டிகளையும், தேர்களையும் செய்து கொடுத்தனர். நால்வகைப் படைகளில் தேர்ப்படையும் ஒன்றாக இருந்ததால் தேர் செய்வது அன்றையத் தச்சர்களின் தலைமையாயக் கடமையாக இருந்து வந்துள்ளது. நல்ல ஓட்டம் உள்ள தேரினை தச்சர்கள் செய்து கொடுத்ததாக சிறுபாணாற்றுப்படை கூறுகிறது.

**உள் அரக்கு எறிந்த உருக்குமாறு போர்வைக்**
***கருந்தொழில் வினைஞர் கைவினை முற்றி***
**ஊர்ந்துபெயர் பெற்ற எழில்நடைப் பாகரொடு**

***(சிறு.பாண்.256-258)***

## கொல்லுந் தொழில்

தமிழர் உலோகத் தொழிலில் மிகவும் மேம்பட்டிருந்தனர். இரும்புசெய் கொல்லரும் பொன்செய் கொல்லரும் தனியே இருந்துள்ளனர். போர்கள் நிறைந்த அக்காலத்தில் வாளும் வேலும் பிறபோர்க் கருவிகளும் செய்ய எண்ணற்ற கொல்லர்கள் தேவைப்பட்டார்கள். கொல்லர்க்கு மன்னர், மக்களுக்குத் தேவையான படை க்கருவிகள் கத்தி, அம்பு போன்ற இரும்பால் ஆன கருவிகளைச் செய்து கொடுத்தனர். இவர்களைச் சிறப்பித்து,

**இரும்பு வடித்தன்ன மடியா மென்தோல்**
**கங்கை வினைஞர்**
**(பெரும்பாண். -222-223)**

**கருங்கைக் கொல்லன் இரும்பு விசைத்த எறிந்த**
**கூடத் திண்ணிசை**
**(பெரும்பாண்.437-438)**
**என்றும் கருந்தொழில் வினைஞர் கைவினை முற்றி**
**(சிறுபாண்.257)**

என்ற வரிகளில் கொல்லர்கள் சிறப்புப் பெயர்களால் அழைக்கப்பட்டதை அறிய முடிகின்றது.

பொற்கொல்லர், மட்பாண்டம் செய்பவர்கள், ஆடை நெய்வோர், உமணர், உணவு சமைப்பவர், காவலர்கள், போர் மறவர்கள், வாகனங்களை இயக்குவோர், கலைஞர்களான பாணர், கூத்தன், விறலி போன்றவர்கள் தொழில் அடிப்படையில் மக்கள் பிரிவுகள் காணப்பட்டன.

### பாணர்

யாழ் என்றும் இசைக் கருவியும், குழல், முழவு முதலான மற்ற இசைக்கருவிகளும் கொண்டு இசையை வளர்த்தவர்கள் பாணர்கள், பண்ணமைத்துப் பாடுவது மட்டுமே பாணர் செயலாகும். கூத்தலைப் போலவே பாணரும் ஒரு குழுவாக இயங்கி வந்துள்ளனர். அக்குழு “ஒக்கல்” எனப்பட்டது என்று அபிதான சிந்தாமணி கூறுகிறது. இதற்குச் சான்றாக

**“காரென் ஒக்கல் கடும்பசி இரவல்”**
**(புறம் .141)**

என்ற அடி உணர்த்துகிறது.

**சிறுபாணனைப் பற்றிச் சிறுபாணாற்றுப்படை**

**“பொன்வார்ந் தன்ன புரிஅடங்கு நரம்பின்**
**இன்குரல் சீறியாழ் இடவயின் தழீஇ**
**நைவழம் பழுநிய நயம்தெரி பாலை”**
**(சிறுபாண் 34-37)**

என்று கூறுகிறது.

பெரும்பாணனைப் பற்றிப் பெரும்பாணாற்றுப்படை

**“பொன்வார்ந் தன்ன புரிஅடங்கு நரம்பின்**
**தோடைஅமை வேள்வி இடவயின் தழீஇ”**
**(பெரும்பாண் 15-16)**

என்ற பாடல் வரிகள் எடுத்தியம்புகின்றன.

### கலைகள்

மனிதன் நாகரிகம் அடைவதற்கு முக்கியமாக இருந்தவை அவன் சிறிது சிறிதாகக் கற்றுக்கொண்ட தொழில்களே ஆகும். ஒவ்வொரு தொழிலையும் கற்றுத் தேர்வதற்கு அவனுக்குப் பல வருடங்கள் கழிந்தன. மனிதனுடைய நல்வாழ்விற்கு உதவுகின்ற எல்லாத் தொழில்களையும் கலை என்று கூறலாம். கலை என்னும் சொல் மனதை வசப்படுத்தக் கூடியதும் நிகழ்த்துகின்றவனையும், பார்வையாளனையும் ஒரே உணர்வுக்குள் கொண்டு வருவதும் பொழுதுபோக்கு கூறுகளையுடையதும் ஆகும்.

### இசை கலைஞர்கள்

சங்க இலக்கியங்கள் இசைக் கலைஞர்கள் பற்றி செய்திகள் பலவற்றையும் வெளிப்படுத்தியுள்ளன. தொழில் முறை கலைஞர்கள் என்று சுட்டும் அடிப்படையில் அகவலன், அகவுநர், அகவர், ஆடுநர், இயவர் கண்ணுளர், கலப்பையர், கூத்தர், கோடியர், துடியன், பரிசிலர், பாடுநர், பாணன், பாண்மகள், விறலி என பாண் மரபின் மக்களைச் சங்க இலக்கியங்கள் குறிப்பிட்டுள்ளன.

### இசைக் கருவிகள்

இசையை இசைப்பதற்கும், இசைக்கும் மேலும் செறிவுட்டவும் பலவகைக் கருவிகள் பயன்படுத்தப்பட்டன. இசை ஆய்வாளர்களின் கருத்துப்படி ஐந்து வகையான கருவிகளால் இசைக்குரிய ஓசைகள் உண்டாகின்றன.

### தோற்கருவிகள்

1. துணைக்கருவிகள்
2. நரம்புக்கருவி
3. கஞ்சக்கருவி

**தோற்கருவிகள்**

பறை, உடுக்கை, மத்தளம், சல்லிகை, கரடிகை, தண்ணுமை, தடாரி, முழவு, முரசு முதலானவை தோற்றக் கருவியைச் சார்ந்தவையாகும். இசைக்கு உதவியாக இசை நிகழ்ச்சிகளில் இக்கருவிகள் பயன்பட்டன. போர்ப்பறைகளையும் இறைவழிபாடு நடைபெறும் பொழுதும் இத்தோற்கருவிகள் இயக்கப்பட்டன.

**முரசு**

சங்க இலக்கியப் பாடல்களில் அதிக அளவு இடம்பெற்றுள்ள தோற்கருவி முரசு ஆகும். இது பெரிய உருவில் அமைந்த ஒரு இசைக்கருவியாகும் முரசைக் குணில் அல்லது குறுந்தடியால் அடித்து முழங்கச் செய்வர். இதனை,

**பேய்க்கண் அன்ன பிளிறுகடி முரசம்**
**மாக்கண் அகலறை அதிர்வென் முழங்கு**
**(பட்டினப்பாலை.48-49)**

என்னும் அடிகளின் மூலம் முரசின் பயன்பாட்டை அறிய முடிகிறது.

**உருமுடிமரசம்**
**(திருமுருகு.121)**

என்னும் அடிகளின் மூலம் அறிய முடிகிறது.

**சிறுபறை**

முருகனை வழிபாடு செய்யும்போது மலைநில மக்கள் குரவைக்கூத்து வெறியாடல் என்னும் கூத்துக்களை நடத்துவர். அக்காலத்தில் பல்வேறு இசைக் கருவிகளுடன் தொண்டகச் சிறுபறை, முழவு, முரசு முதலான போர்க்கருவிகளும் இசைக்கப்பட்டன இதனை,

**குன்றசி சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து**
**தொண்டகச் சிறுபறைக் குரவை அயர**
**(திருமுரு .196-197)**

என்னும் அடிகளின் மூலம் அறிய முடிகிறது. இதன்மூலம் இறையுணர்வு வெளிப்படும் போது இசையுணர்வும் வெளி ப்படும் என்ற செய்தி புலப்படுகிறது.

**குழல்**

முல்லைநில ஆயர்கள் ஆடு, மாடு மேய்க்கச் செல்கையில் காட்டில் தங்கி தீக்கடைக் கோலாலே புகை பறக்கும் நிலையில் கையாலே தீயினால் மூங்கிலில் துளையிட்டு குழலை அமைத்துப் பாலைப் பண்ணை வாசித்து மகிழ்ந்துள்ளனர். என்பதை,

**கன்றமர் நிரையொடு கானத் தல்கி**
**அந்து ணர்விர்புகை கமழக் கைமுயன்று**
**ஞெலிகோற் கொண்ட பெருவிறல் நெகிழச்**
**செந்தீத் தோட்ட கருத்துளைக் குழவின்**
**இன்றிம் பாலை**
**(பெரும்பாண்.176-190)**

என்று பெரும்பாணாற்றுப்படை குறிப்பிடுகிறது.

**குழலோசையின் தாளத்திற்கு ஏற்ப விறலி ஆடியதை**
**ஆறற் குழற்பாணி தூங்கியவரோடு**

என்று சிறுபாணாற்றுப்படை குறிப்பிடுகிறது.

**சங்கு**

பொதுவாக வலப்பக்கத்தோடு தொடர்புடைய பொருட்கள் சிறப்பிடம் பெறுவதுண்டு வலம்புசங்கு சிறப்புடையதாக சங்க காலத்தில் கருதப்பட்டுள்ளது. இதனை,

**வலம்புரி அன்ன வசைநீங்கு சிறப்பின்**

என்ற பெரும்பாணாற்றுப்படை அடியின் மூலம் அறிய முடிகிறது

**உயிர்எழுத்து இசைப்ப வால்வனை ஞரல்**

என்று திருமுருகாற்றுப்படை குறிப்பிடுகிறது (திருமுருகு.120)

**தொகுப்புரை**

சமுதாயம் என்பது பல குழுக்கள் கொண்டது மனிதர்களின் கூட்டமைப்பாக செயல்படுகிறது. தொழிலின் அடிப்படையில் சமுதாயத்தில் மக்கள் பிரிவுகள் காணப்படுகின்றன. வேளாளர் உழவுத்தொழில் செய்பவரே ஒரு நாட்டின் உயிர்நாடியாக கருதப்பட்டனர். தச்சர், கொல்லர், குயவர், நெசவாளர், உமணர், மடைத்தொழில்,

கடைக்காப்பாளர், போர்மறவர், வரிவாங்குபவர் என்று தொழிலின் அடிப்படையில் மக்கள் பிரிவுகளைக் கொண்டுள்ளனர்.

ஆற்றுப்படை கலைஞர்கள் ஓவியக்கலை, இசைக்கலை, நடனக்கலை போன்ற கலைகளை கற்றறிந்துள்ளனர். பாணர்கள் உண்பதற்கு உணவின்றிப் பட்டினியில் தவித்தனர். தழையையும் கீரையும் உப்பின்றி வேகவைத்து உண்டனர். பழுமரத்தை நாடிச் செல்லும் பறவையைப் போல கலைஞர்கள் நாடோடி வாழ்க்கை வாழ்ந்தனர். வறுமையில் வாடக் கூடியவர்களாக இருந்தாலும் மனித நேயமிக்கவர்களாக ஆற்றுப் படைக் கலைஞர்கள் இருந்தனர். தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்று பெற்றுவந்த பரிசிலைத் தான் மட்டும் உண்ணாது மற்ற வறியவர்க்கும் தருவதோடு இரவலரைப் புரவலர்பால் ஆற்றுப்படுத்தவும் செய்தனர் என்பதை ஆற்றுப்படை பாடல்கள் தெளிவாக விளக்குகின்றன. இவ்வாறு சங்ககால சமுதாயத்தின் மக்களின் வாழ்வியலையும் தொழிலையும் ஆற்றுப்படை நூல்கள் தெளி வாக எடுத்துரைக்கின்றன.

## துணைநூற்பட்டியல்

1. புலியுர்கேசிகன் (உ.ஆ.), தொல்காப்பியம் (முழுவதும்), ஸ்ரீ செண்பகா பதிப்பகம், சென்னை, 2010.
2. குமரேசன்.மு, ஆற்றுப்படையில் வாழ்வியல் நெறிகள், பல்லவி பதிப்பகம், ஈரோடு - 11,2007.
3. சாமிநாதையர் உ.வே (உ.ஆ.), புறநானூறு தமிழ்ப் பல்கலைக்கழக வெளி யீடு, தஞ்சாவுர், 1985.
4. டாக்டர். மு.வரதராசன் (தெளி வுரை), திருக்குறள், கழக வெளி யீடு, சென்னை, 2000.
5. சாமிநாதையர் உ.வே. (உ.ஆ.), பத்துப்பாட்டு மூலமும் நச்சி னார்கினியருரையும், தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவுர், 1986.